தினமணி

## மேட்டூர் அணை நீர்மட்டம் 83.53 அடி

First Published : 17 Jan 2010 10:56:49 AM IST

சேலம், ஜன. 16: மேட்டூர் அணை நீர்மட்டம் சனிக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 83.53 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 542 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 4,003 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணை நீர் இருப்பு 45.56 டி.எம்.சி.

## குன்னூரில் காய்கறி விலை கடும் உயர்வு

First Published : 17 Jan 2010 10:44:51 AM IST

குன்னூர், ஜன.16: நீலகிரி மாவட்டத்தில் விலையும் காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் பொதுக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த மாதம் 7-ம் தேதி பெய்த பலத்த மழை காரணமாக பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதன் காரணமாக குன்னூர் உதகை சாலை மற்றும் குன்னூர் மேட்டுப்பாளையம் இடையேயான போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டது.

அனைத்து வாகனங்களும் கோத்தகிரி வழியாக சுற்றிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது.

இதன் காரணமாக சரக்கு வாகனங்களின் வாடகை செலவு அதிகம் இருப்பதால் தற்போது அத்தியாவசியப் பொருட்களின் விலையும் இரண்டு மடங்குக்கு மேல் உயர்ந்து காணப்படுகிறது.

வெள்ளிக்கிழமை முதல் குன்னூர் மேட்டுப்பாளையம் சாலை சீரடைந்துள்ளதால் உழவர் சந்தையிலாவது காய்கறிகளின் விலையை கட்டுப்படுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 'நீலகிரி நிலச்சரிவுகளுக்கு புவி வெப்பமும் காரணம்'

First Published : 16 Jan 2010 11:25:25 AM IST

உதகை ஜன.15: நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவுகளுக்கு புவி வெப்பமும் ஒரு காரணமென, தமிழ்நாடு அறிவியல் இயக்கம் கருத்து தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு அறறிவியல் இயக்கத்தின் சார்பில் உதகையிலுள்ள பெத்லகேம் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் இயற்கை பாதுகாப்பு கருத்தரங்கு நடைபெற்றது. அப்போது புவி வெப்பம் குறித்த அறிவியல் உண்மைகளை அறிந்து சுற்றுச்சூழலை பாதுகாக்கத் தவறினால் ஆபத்துகளை தவிர்க்க முடியாது என பேச்சாளர்கள் குறிப்பிட்ட னர்.

இதில் தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயலர் ராஜு சிறப்பு விருந்தினராக பங்கேற்று பேசியதாவது:

புவி வெப்பம் என்பது பல்லாண்டு கால ஆய்வுக்குப் பின்னர் கண்டறியப்பட்ட அறிவியல் உண்மையாகும். புவி வெப்பம் என்பதும், பருவநிலை மாற்றம் என்பதும் வெவ்வேறு கருத்துகளாகும். வெப்பநிலை மாறும்போது பருவநிலையிலும் மாற்றம் ஏற்படும். தட்பவெப்ப மாற்றம் என்பது அவ்வப்போது ஏற்படும் நிகழ்வாகும். 30 ஆண்டுகளில் ஏற்படும் சராசரி தட்ப வெப்பநிலையே பருவநிலை மாற்றம் எனப்படுகிறது.

தற்போது நாம் வாழும் பூமியில் பலமுறை பருவநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. 15,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட பனி யுகத்தின் போது சுமார் 10 மீ்ட்டர் உயரத்துக்கு பனிப்படலம் இருந்தது.

அப்போது பூமியின் வெப்பநிலை 7 டிகிரி மட்டுமே இருந்துள்ளது. ஆனால் கடந்த 100 ஆண்டுகளில் பூமியின் வெப்பநிலை 0.74 டிகிரி செல்சியஸ் உயர்ந்துள்ளது. இதற்கு கார்பன்டை ஆக்சைடு போன்ற வாயுக்களே முக்கிய காரணமாகும்.

கடந்த 50 ஆண்டுகளில் பூமியின் வெப்பநிலை இரு மடங்கு அதிகரித்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் இருந்த வெப்பநிலை கடந்த 100 ஆண்டுகளில் இருந்த வெப்பநிலை சராசரியைவிட அதிகமாகும்.

புவியில் கார்பன்டை ஆக்சைடின் அளவு 1000 கோடி டன் இருந்தால் புவியின் வெப்பநிலை 2 டிகிரி் அதிகரிக்குமென விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஏற்கனவே 500 கோடி கார்பன்டை ஆக்சைடு புவியில் செலுத்தப்பட்டுவிட்டது.

இந்நிலை தொடர்ந்தால் அடுத்த 40 ஆண்டுகளில் 500 கோடி டன் கார்பன்டை ஆக்சைடு உண்டாகும். இதன் ஆயுட்காலம் 200 ஆண்டுகளாகும்.

புவி வெப்பத்தின் தாக்கம் ஏற்கெனவே தொடங்கி விட்டதால் பனி மலைகள் உருகுதல், கடல் மட்டம் உயர்தல், பூமியின் மையப்பகுதியில் வெப்பம் அதிகரித்தல் போன்றவைகளும் நிகழத் தொடங்கிவிட்டன.

தொடர்ச்சியாக வறட்சி, பஞ்சம் போன்ற பிரச்னைகளும் அதிகரிக்கும். புவி வெப்பத்தை உற்பத்தி செய்வதில் பணக்கார நாடுகள்தான் பெரும் பங்கு வகிக்கின்றன. ஆனால இதில் பாதிக்கப்படுவது இந்தியா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளேயாகும்.

அண்மையில் நீலகிரியில் ஏற்பட்ட பெரும் மழை மற்றும் நிலச்சரிவுக்கு புவி வெப்பமும் முக்கிய காரணமாகும். புவி வெப்பத்தை தடுக்க முடியாவிட்டாலும், கட்டுப்படுத்த முடியும்.

தற்போது நிலவும் வெப்பத்துக்கு காடழிப்பே 25 சத காரணமாகும். எனவே காடுகளை வளர்த்தல், பெட்ரோல், டீசல் மற்றும் நிலக்கரியின் பயன்பாட்டை குறைத்தல், மின் சிக்கனம் போன்றவற்றால் மட்டுமே புவி வெப்பத்தை கட்டுப்படுத்த முடியுமென அவர் குறிப்பிட்டார்.

### பருவகால அட்டவணை தயாரிப்புப் பயிற்சி

First Published : 18 Jan 2010 08:46:46 AM IST

புதுக்கோட்டை, ஜன. 17: புதுக்கோட்டையில் விவசாயிகளுக்கு பருவகால அட்டவணை தயாரிப்பது குறித்த பயிற்சி அளிக்கும் முகாம் அண்மையில் நடைபெற்றது.

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், கிராம வள மையம் சார்பில் நடைபெற்ற இந்தப் பயிற்சி முகாமுக்கு, அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் எல். பிரபாகரன் தலைமை வகித்தார். மண்டல கால்நடை பல்கலைக்கழக பேராசிரியர் மற்றும் தலைவர் பி.என். ரிச்சர்டுஜெகதீசன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர். ராஜ்குமார் ஆகியோர் முகாமைத் தொடக்கிவைத்தனர். சிறப்பு விருந்தினராக சென்னை விஞ்ஞானி ஜே. ஸ்ரீதர் பங்கேற்றார். புதுக்கோட்டை அரசு மகளிர் கல்லூரி தாவரவியல் துறைத் தலைவர் கோமளவள்ளி, விவசாய ஆசிரியர் பி. செந்தில்குமார், சுகாதார ஆய்வாளர் கே. ராவணன், குழந்தைகள் வளர்ச்சித்திட்ட பயிற்றுனர் ஜி. புஷ்பகலா, முன்னோடி விவசாயிகள் கூவாட்டுப்பட்டி முருகேசன், தளிஞ்சி ராமசாமி ஆகியோர் கருத்தாளர்களாகப் பங்கேற்றனர்.

முன்னதாக, கிராம வள மைய இணைத் திட்ட அலுவலர் எஸ். முருகேசன் வரவேற்றார். எஸ். குருமூர்த்தி நன்றி கூறினார்.

### விதியை மீறி உரம் விற்ற நிறுவனங்கள் மீது நடவடிக்கை: ஆட்சியர்

First Published : 17 Jan 2010 12:19:47 PM IST

தேனி, ஜன. 16: விதிகளை மீறி உரம் விற்ற, இருப்பு வைத்திருந்த உர விற்பனை நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என தேனி மாவட்ட ஆட்சியர் பூ. முத்துவீரன் தெரிவித்துள்ளார்.

தேனி மாவட்டத்தில் தனியார் உர விற்பனை நிறுவனங்களில் கூடுதல் விலைக்கு உரங்கள் விற்பதாகவும், வேளாண்மை அலுவலர்கள் பரிந்துரை செய்த உரங்கள் சரியாகக் கிடைப்பதில்லை என்றும் விவசாயிகளிடமிருந்து புகார் வந்தது.

இதனையடுத்து, மாவட்டத்தில் 8 ஒன்றியங்களிலும் துணை ஆட்சியர் அளவிலான குழுவினர் திடீர் ஆய்வு மேற்கொள்ள ஆட்சியர் உத்தரவிட்டார்.

இந்த திடீர் ஆய்வில், சின்னமனூர் வட்டாரத்தில் உள்ள 2 உர விற்பனை நிறுவனங்களில் உரக் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் உரங்களை விவசாயிகளுக்குச் சரியான முறையில் விற்பனை செய்யாமல் முறைகேடு செய்தது கண்டறியப்பட்டது. மேலும் புத்தக இருப்புக்கு மேல் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டது தெரியவந்தது.

விற்பனை உரிமத்தில் பதிவு செய்யாத உரங்களை கொள்முதல் செய்து விற்பனை செய்துவந்ததும் கண்டறியப்பட்டது. மேலும் சில இடங்களில் விவசாயிகளிடம் கையொப்பம் பெறாமல் உரம் விற்பனை செய்ததும், விலை பட்டியல்களில் விற்பனை விலை சரியாகப் பதிவு செய்யாமல் விற்பனை செய்ததும் தெரியவந்தது.

கம்பம், மயிலாடும்பாறை பகுதிகளில் கொள்முதல் பட்டியல்கள், இருப்பு விவரம் விதிகளின்படி இல்லாதது கண்டறியப்பட்டது.

இந்த நிறுவனங்களின் மீது உரச் சட்டம் 1985-ன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

### விதை கிராமத் திட்ட பயிற்சி முகாம்

First Published : 18 Jan 2010 08:53:16 AM IST

மன்னார்குடி, ஜன. 17: மன்னார்குடி அருகே காஞ்சிக்குடிகாட்டில் உள்ள அரசு விதைப் பண்ணையில் வேளாண்மைத் துறை சார்பில் விதை கிராமத் திட்டப் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

பயிற்சி முகாமை, திருவாரூர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் கபிலன் தொடக்கிவைத்தார்.

மன்னார்குடி வேளாண்மை உதவி இயக்குநர் மயில்வாணன், விதைச் சான்று அலுவலர் தெய்வேந்திரன், பண்ணை மேலாளர் ராஜேந்திரன் ஆகியோர் பயிற்சியில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு விதை நெல் உற்பத்தி,விதை சுத்திகரிப்பு முறை, செம்மை நெல் சாகுபடி, இயந்திர நடவு முறை, இயற்கை வேளாண்மை ஆகியவை குறித்து பயிற்சி அளித்தும், செயல் விளக்கம் செய்தும் காட்டினர்.

இதில் மன்னார்குடி,கோட்டூர் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். முகாமில் வேளாண்மை அலுவலர்கள் காமராஜ், மீனா, உதவி விதை அலுவலர்கள் தர்மராஜ், சூரியநாராயணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**விவசாய விளைபொருள் கூட்டுறவு சங்கத்தை சீர்படுத்த கோரிக்கை**

First Published : 18 Jan 2010 06:51:19 AM IST

மார்த்தாண்டம், ஜன. 17: கல்குளம், விளவங்கோடு விவசாய விளைபொருள் உற்பத்தி மற்றும் விற்பனை கூட்டுறவு சங்கத்தின் சீர்கேட்டை களைந்து சீர்படுத்த ஐ.என்.டி.யூ.சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் முதல்வருக்கு அனுப்பிய மனு:

கல்குளம், விளவங்கோடு விவசாய விளைபொருள் உற்பத்தி மற்றும் விற்பனை கூட்டுறவு சங்கத்தில் 2008-ம் ஆண்டு மார்ச் முதல் இளநிலை உதவியாளராக பணி உயர்வு பெற்ற 2 பேருக்கு இதுவரை பணி உயர்வுக்கேற்ற ஊதியம் வழங்கப்படவில்லை.

இது குறித்து தொழிலாளர் நலத் துறை மூலம் உத்தரவிடப்பட்ட ஊதியத்தை உடனே வழங்க வேண்டும்.

கூட்டுறவு சங்கத்தின் விற்பனையாளர்கள் தலைமை அலுவலகத்திற்கு பணம் செலுத்த வரும்போது வழங்கவேண்டிய பயணப்படி தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குமரி மாவட்டத்தில் பெரிய கூட்டுறவு நிர்வாகமாக உள்ள இந்த கூட்டுறவு சங்கத்துக்கு உடனே தனி அதிகாரியை நியமிக்க வேண்டும்.

இந்த கோரிக்கைகள் மீது உடனே நடவடிக்கை எடுக்கப்படாவிடில் பிப்ரவரி மாதம் 8-ம் தேதி கூட்டுறவு சங்க தலைமை அலுவலகம் முன்பு உண்ணாவிரதம் நடத்தப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இயற்கை சீற்றங்களில் இருந்து பாதுகாக்கும் மன்னார் வளைகுடா தீவுகள்**

First Published : 17 Jan 2010 01:53:23 PM IST

கீழக்கரை, ஜன. 16: ராமநாதபுரம் மாவட்ட கடற்கரையோரப் பகுதிகளில் அதிகப் பாதிப்பை ஏற்படுத்தும் இயற்கை சீற்றங்களில் இருந்து பாதுகாக்கும் அரணாக மன்னார் வளைகுடா தீவுகள் விளங்குகின்றன.

கடற்கரையில் அதிகப் பாதிப்பை ஏற்படுத்தும் இயற்கை சீற்றங்களில் முக்கியமானது புயல், சூறாவளி, மற்றும் ஆழிப் பேரலை (சுனாமி).

வடகிழக்குப் பருவ மழை பெய்யும் காலங்களில் அலைகளின் வேகம் 65 முதல் 120 கி. மீட்டராக இருக்கும்.

இவ்வாறு அதிவேக காற்று வீசும்போது பல கடல்வாழ் தாவர மற்றும் விலங்கினங்கள் பாதிக்கின்றன.

2004-ம் ஆண்டு டிசம்பர் 26-ம் தேதி இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவுகளில் கடலுக்கு அடியில் மிகப் பெரிய பூகம்பம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 9.0 ஆகப் பதிவானது. இது அந்தமான் நிக்கோபர் மற்றும் இந்தியாவின் கடலோரப் பகுதிகளில் உணரப்பட்டது.

தென் தமிழக கடற்கரைப் பகுதிகள் கடந்த சுனாமியால் அதிகளவில் பாதிக்கப்பட்டதோடு, மிகுந்த பொருள் சேதத்தையும் ஏற்படுத்தியது.

ஆனால், மன்னார் வளைகுடாப் பகுதிகள் அதிகம் பாதிக்கப்படவில்லை, ஏனெனில், நம் அண்டை நாடான இவங்கையைப் பெருமளவில் பாதித்த சுனாமி, அதனுடைய சீற்றத்தை குறைத்து நீரோட்ட வேகம் தடைபட்டதால், தமிழகத்தின் தென் கடலோரப் பகுதிகள் சுனாமி தாக்குதலிலிருந்து அதிகப் பாதிப்பில்லமல் தப்பியது என்று கூறப்படுகிறது. மேலும் சுனாமியால் கடற்கரையோரப் புவியமைப்பு சற்று மாறுபட்டுக் காணப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்னார் வளைகுடாவில் 32 வகுப்புகளைச் சார்ந்த சுமார் 104 வகை பவளங்கள் உள்ளன. இந்திய எல்லைக்குள்பட்ட மன்னார் வளைகுடா பகுதியில் வான் தீவு, காசுவார் தீவு, காரைசல்லி தீவு, விலங்கு சல்லி தீவு, உப்புத்தண்ணித் தீவு, புலுவினிசல்லித் தீவு, நல்லதண்ணித் தீவு, ஆணைப்பார் தீவு, தலையாரித் தீவு, வாழைத் தீவு, முள்ளித் தீவு, முயல் தீவு, மனோலி தீவு, மனோலிபுட்டி தீவு, பூமரிச்சான் தீவு, புள்ளிவாசல் தீவு, குருசடைத் தீவு, சிங்கில் தீவு போன்ற 21 தீவுகள் 623.12 ஹெக்டேர் நிலப் பரப்பில் இந்திய எல்லைக்குள்பட்ட ராமநாதபுரம் மாவட்ட மன்னார் வளைகுடா கடல் பகுதியில் அமைந்துள்ளன.

மன்னார் வளைகுடா கடற்கரைப் பகுதியின் பாதுகாப்புக்கும், மீன் வளப் பெருக்கத்துக்கும் தீவுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்று மன்னார் வளைகுடா உயிர் கோள காப்பக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பயிர்க் காப்பீட்டுத் திட்ட நஷ்டஈடு: அறிவிப்பு

First Published : 17 Jan 2010 01:54:34 PM IST

சிவகங்கை,ஜன.16: சிவகங்கை மாவட்ட விவசாயிகள் 2009-ம் ஆண்டு சம்பா நெற்பயிருக்கான மழைக் காப்பீடு திட்டத்தில் நஷ்டஈடு பெற மார்ச் வரை பொறுத்திருக்க வேண்டும். வதந்திகளைக் கண்டு ஏமாறவேண்டாம் என வேளாண்காப்பீடு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக, இந்திய வேளாண் காப்பீடு நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு விவரம்:

சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் 2009-ம் ஆண்டு சம்பா நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு வர்ஷ பீமா என்ற மழைக்காப்பீடு திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் 2009 செப்டம்பர் 15 தொடங்கி டிசம்பர் 31 முடிய விதைப்பருவம், வளர்ச்சிப்பருவம், அறுவடைப்ப ருவம் என 3 பருவங்களில் பொதுவான மழை குறைவு அளவிடப்பட்டு நஷ்டஈடு கணக்கிடப்படுகிறது.

அடுத்து செப்டம்பர் 15 முதல் நவம்பர் 15 முடிய தினமும் 2.5 மில்லி மீட்டருக்கு குறைவான மழை பெய்திருப்பின் தொடர் வறண்ட நாள்கள் அளவிடப்பட்டு நஷ்டஈடு கணக்கிடப்படும். மூன்றாவதாக, செப்டம்பர் 15 முதல் ஜனவரி 31 வரை கூடுதல் மழை கண்காணிப்பு காலம் கணக்கிடப்படுகிறது.

விதைப்பு, வளர்ச்சி,முதிர்ச்சி பருவங்களில் ஒவ்வொரு நாளும் விதிகளில் கூறப்பட்டிருப்பதை விடவும், கூடுதல் மழை பெய்திருப்பின் அதற்கான நஷ்டஈடு கணக்கிடப்படும். எனவே, இத்திட்டத்தில் காப்பீடு செய்துள்ள விவசாயி களுக்கு நஷ்டஈடு கணக்கிடும் காலம் ஜனவரி 31 வரை நீடிக்கிறது. இத்திட்டத்தில் இதுவரை நஷ்டஈடு எதுவும் அறிவிக்கப்படவில்லை. மேற்குறிப்பிட்ட தேதிகள் முடிவடைந்த பிறகு, ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட மழை மானி அளவுகள் 2010 பிப்ரவரி 28-ல் பெறப்படும். பிறகு அந்தந்த வட்டாரங்களுக்கு நஷ்டஈடு கணக்கிடப்பட்டு மார்ச் மாதத்தில் அறிவிக்கப்படும். எனவே, இத்திட்டத்திற்கான காப்பீடு அறிவிக்கப்பட்டதாக கூறப்படும் வதந்தி களை நம்பவேண்டாம என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அறுவடை இயந்திரத் தரகர்களால் சம்பா நெல் விவசாயிகள் பாதிப்பு

First Published : 18 Jan 2010 01:57:22 AM IST



கடலூர், ஜன. 17: நெல் அறுவடை இயந்திரத் தரகர்களால், கடலூர் மாவட்டத்தில் சம்பா நெல் அறுவடை பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது.

காவிரி டெல்டா பாசனப் பகுதிகள் 1.5 லட்சம் ஏக்கர் உள்பட, 2.5 லட்சம் ஏக்கரில் கடலூர் மாவட்டத்தில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டு இருக்கிறது. ÷ஆழ்குழாய் கிணற்றுப் பாசனப் பகுதிகள் மற்றும் காவிரி டெல்டா பகுதிகளில் முன்னரே தண்ணீர் கிடைத்த காட்டுமன்னார்கோவில் தாலுகா உள்ளிட்ட பகுதிகளில், ஜனவரி முதல் வாரத்தில் அறுவடை தொடங்கி விட்டது.

திங்கள்கிழமை முதல் நாளொன்றுக்கு 25 ஆயிரம் ஏக்கரில் அறுவடை நடைபெறும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

கடலூர் மாவட்டத்தில் சம்பா அறுவடை தொடங்கி இருக்கும் நிலையில் தற்போது 60 தனியார் நெல் அறுவடை இயந்திரங்கள் பணியில் உள்ளன. அதிக ஏக்கரில் அறுவடை தொடங்கும் போது, மேலும் 100 அறுவடை இயந்திரங்கள் தேவைப்படும் என்றும் விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

இவைகள் அனைத்தும் சேலம் ஆத்தூர், நாமக்கல் போன்ற ஊர்களில் இருந்து வந்துள்ளன. அறுவடை இயந்திரங்களை அதன் உரிமையாளர்கள் நேரடியாக வாடகைப் பணியில் ஈடுபடுத்தாமல், இடைத்தரகர்கள் மூலம் இயக்குகின்றனர்.

இடைத்தரகர்கள் அறுவடை இயந்திர உரிமையாளர்களிடம், ரூ. 30 ஆயிரம் முதல் ரூ. 50 ஆயிரம் வரை முன் பணம் செலுத்தி, கடலூர் மாவட்டத்துக்கு அறுவடை இயந்திரங்களைக் கொண்டு வந்து உள்ளனர்.

ஏக்கர் ஒன்றுக்கு அறுவடைக் கட்டணமாக ரூ. 1,300 வரை விவசாயிகளிடம் வசூலிக்கிறார்கள். இதில் இடைத்தரகர்கள் ரூ. 500 வரை கமிஷன் எடுத்துக் கொள்கிறார்களாம்.

மேலும் நெல் கொள்முதல் செய்யும் வியாபாரிகள்தான் அறுவடை  இயந்திரங்களை, வெளி மாவட்டங்களில் இருந்து கொண்டு வந்து, இடைத் தரகர்களாகச் செயல்படுகிறார்கள்.

இதன் காரணமாக தாங்கள் அறுவடை செய்யும் நெல்லைத் தங்களிடம்தான் விற்பனை செய்ய வேண்டும் என்று விவசாயிகளைக் கட்டாயப்படுத்துகிறார்கள்.  இயந்திரங்கள் மூலம் அறுவடை செய்யப்படும் நெல், அரசு நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் செல்லாமல், தனியார் நெல் கொள்முதல் வியாபாரிகளிடம் செல்ல வேண்டிய கட்டாயம் உருவாகி இருப்பதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.

தற்போது சம்பா நெல் விவசாயிகளிடம் இருந்து மூட்டை (60 கிலோ) ரூ.725 முதல் ரூ.775 வரை தனியார் வியாபாரிகள் கொள்முதல் செய்கிறார்கள்.

இது குறித்து பாசிமுத்தான் ஓடை விவசாயிகள் சங்கத் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், "கடலூர் மாவட்டத்தில் 114 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க உத்தேசிக்கப்பட்டு, 64 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு விட்டன. மேலும் 50 கொள்முதல் நிலையங்கள் 20-ம் தேதி திறக்கப்பட உள்ளன.

நெல் அறுவடை இயந்திரத் தரகர்களால், விவசாயிகளுக்கு நியாயமான வாடகையில் அறுவடை இயந்திரம் கிடைக்க வில்லை. மேலும் அறுவடை செய்த நெல்லை, அரசு கொள்முதல் நிலையங்களுக்கு எடுத்துச் சென்று நியாயமான விலையில் விற்கவும் முடியவில்லை.

தனியார் வியாபாரிகள் மூலம் மூட்டைக்கு (60 கிலோ) ரூ.1,000 வரை விலை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அதையும் அறுவடை இயந்திரத் தரகர்களால் தட்டிப் பறிக்கப்படுகிறது.

இதில் அரசு தலையிட்டு, விவசாயிகளுக்கு நெல் அறுவடை இயந்திரங்கள் நியாயமான வாடகையில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

### கோவை வேளாண் துணைவேந்தருக்கு "வேளாண் முன்னோடி விருது'

First Published : 17 Jan 2010 12:43:35 PM IST

கோவை, ஜன.16:வேளாண் பல்கலை. துணைவேந்தர் முருகேசபூபதிக்கு

வேளாண்மையில் மேன்மையான சேவைகளுக்கான ரோட்டரி "வேளாண் முன்னோடி' விருது வழங்கப்பட்டது.

சிறந்த முனைவராக, ஆராய்ச்சியாளராக, விரிவாக்கப் பணியாளராக, பேராசிரியராக, மேலாண்மை அதிகாரியாக இருப்பதைக் கருத்தில் கொண்டு இந்த உயரிய ரோட்டரி "வேளாண் முன்னோடி' விருதை தொழில்முறை விருது வழங்கும் விழாவில் பன்னாட்டு ரோட்டரி கோவை அப்டவுன் சங்க மாவட்ட ஆளுநர் மாத்யூஸ் வழங்கினார்.

இந் நிகழ்ச்சியில், பாரதியார் பல்கலை. துணைவேந்தர் சி.சுவாமிநாதன், பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி முதல்வர் பொன்னுசாமி  உள்பட கலந்து கொண்டனர்.

### ஜன. 25-ல் கோழிப் பண்ணையாளர்கள், முட்டை வியாபாரிகள் சந்திப்புக் கூட்டம்

First Published : 17 Jan 2010 10:23:18 AM IST

நாமக்கல், ஜன. 16: முட்டை விலை நிர்ணயம் செய்தல் மற்றும் அதனை அமல்படுத்துவதில் உள்ள இடர்பாடுக ளுக்கு தீர்வு காணும் வகையில், வரும் 25-ம் தேதி கோழிப் பண்ணையாளர்கள், முட்டை வியாபாரிகளுடன் கலந்தா லோசனை நடத்தப்பட உள்ளது.

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு (என்இசிசி) தலைவர் டாக்டர் பி. செல்வராஜ் விடுத்துள்ள செய்தி:

நாமக்கல் அடுத்த பொம்மைக்குட்டை மேட்டில் உள்ள லட்சுமி திருமண மஹாலில் என்இசிசி சார்பில் மாலை 4 மணிக்கு இந்த சந்திப்புக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுô்ளது. இந்தியாவில் உள்ள தெற்கு மாநிலங்களில் அங்கம் வகிக்கும் என்இசிசி மண்டலக் குழு நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் கடந்த 7-ம் தேதி நாமக்கல்லில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேசிய நிர்வாகிகள், நாமக்கல் மண்டலத்தில் மட்டும் முட்டை விலைக்கு மைனஸ் விலை உள்ளது. இதனால், பிற மாநில சந்தைகளின் விற்பனையும் பாதிக்கப்படுகிறது என புகார் கூறினர். நாமக்கல் மண்டல என்இ சிசி குழு நிர்ணயிக்கும் விலையில் இருந்து முட்டை வியாபாரிகள் 20 காசுகளோ அல்லது அதிகபட்சமாக 60 காசு களோ விலை குறைத்தே முட்டை வாங்குகின்றனர். போக்குவரத்து செலவை காரணமாக கூறும் வியாபாரிகள் திருச்சிக்கு முட்டையை கொண்டு செல்வதற்கும், திருவனந்தபுரத்துக்கு முட்டையை கொண்டு செல்வதற்கும் ஒரே விலையை நிர்ணயிப்பது ஏற்புடையதல்ல.

இந்த நடவடிக்கைகளால் பண்ணையாளர்களும், முட்டை நுகர்வோரும் மட்டுமே பாதிக்கப்படுகின்றனர். பண்ணை யாளர்களிடம் குறைந்த விலைக்கு பெற்று நுகர்வோருக்கு கூடுதல் விலைக்கே விற்கப்படுகிறது. இந்தநிலையை மாற்றவும், பண்ணையாளர்கள் தங்களது உற்பத்தி பொருளுக்கு நிர்ணய விலை பெறவும், ஏற்றுமதிக்கு முட்டை வழங்கும் பண்ணையாளர்களுக்கு உள்ள நெருக்கடி நிலை குறித்தும் இக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது. கோழிப் பண்ணையாளர்கள், முட்டை வியாபாரிகள், வட மாநில வியாபாரிகள், சங்க நிர்வாகிகள் பங்கேற்கவுள்ள னர்.

தினமலர்

## அரவைக்கு கரும்பு இல்லாமல் சர்க்கரை ஆலைகள் திண்டாட்டம்

ஜனவரி 18,2010,01:42



ஈரோடு:தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள், அரவைக்கு கரும்பு இல்லாமல் திண்டாடும் நிலை உள்ளது. இதனால், சர்க்கரை உற்பத்தி பெருமளவு குறைய வாய்ப்புள்ளது. கரும்புக்கு அரசு போதிய விலை நிர்ணயம் செய்யாததை அடுத்து, 2,300 ரூபாய் வரை கொடுக்கும் தனியார் நாட்டு சர்க்கரை ஆலைகளுக்கு விவசாயிகள் கரும்பு வழங்குகின்றனர். தனியார் சர்க்கரை ஆலைகளில் கரும்பு அரவை பாதிக்கப்பட் டுள்ளது.தமிழகம் முழுவதும் ஆண்டுதோறும் சராசரியாக 60 லட்சம் ஏக்கருக்கு மேல் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது.

கரும்புக்கு அரசு போதிய விலை நிர்ணயம் செய்யாததால், ஆண்டுதோறும் கரும்பு சாகுபடி பரப்பளவு குறைந்து கொண்டே வருகிறது. இரண்டு ஆண்டுக்கு முன், ஒரு டன் கரும்புக்கு 1,050 ரூபாய் அரசு வழங்கியது. ஒரு ஏக்கர் கரும்பு சாகுபடி செய்ய, கரணை, உரம், பூச்சி மருந்து, பார் பிடித்தல் உட்பட 10 மாதம் பராமரிப்பு செலவு சேர்த்து 45 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது.ஒரு ஏக்கர் நிலத்தில் 40 டன் கரும்புதான் கிடைக்கிறது. இதன்மூலம், 45 ஆயிரம் ரூபாய் தான் விவசாயிகளுக்கு கிடைக்கிறது. 45 ஆயிரம் ரூபாய் வரை சாகுபடிக்கு செலவாவதால், கரும்பு பயிரிடுவதால் விவசாயிகளுக்கு நஷ்டமே மிஞ்சியது.

தமிழகத்தில் 2006-2007ம் ஆண்டுக்கு முன் வரை, சர்க்கரை ஆலைகள் ஆண்டு முழுவதும் சர்க்கரை உற்பத்தி செய்தன. அதன்பின், உரம் உட்பட அனைத்து பொருட்களும் விலை உயர்ந்ததால், ஆண்டு தோறும் கரும்பு விவசாயிகள் நஷ்டமடையும் நிலை ஏற்பட்டது. நான்கு ஆண்டுகளாகவே கரும்பு சாகுபடி செய்யும் பரப்பு குறைந்து விட்டது. உற்பத்திக்கு தேவையான கரும்பு இல்லாமல், பெரும்பாலான சர்க்கரை ஆலைகள், கடந்தாண்டு ஆறு முதல் எட்டு மாதங்கள் வரையே இயங்கின. கடந்தாண்டு பதிவு செய்த கரும்பை சர்க்கரை ஆலைகள் குறித்த நேரத்தில் வெட்டாமல், காலம் தாழ்த்தின. இதனால், நன்கு விளைந்த கரும்பை வயலிலேயே தீ வைத்து எரிக்கும் நிலை ஏற்பட்டது.

சமீபத்தில் மத்திய அரசு, '9 சதவீதம் சர்க்கரை சத்துள்ள கரும் புக்கு 1,435 ரூபாய் வழங்க வேண் டும். இதற்கு கூடுதலாக மாநில அரசுகள் விலை நிர்ணயம் செய்தால், கூடுதல் பணத்தை, மாநில அரசே தனது பொது நிதியில் இருந்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்' என சட்டம் கொண்டு வந்தது. லோக்சபா குளிர்கால கூட்டத் தொடர் துவங்கியதுமே, எதிர்க் கட்சிகள் அமளியை ஏற்படுத்தியதால், ஒரு வாரத்துக்கு மேலாக லோக்சபா ஒத்தி வைக்கப் பட்டது. இருப்பினும், அச் சட்டத்தை திருத்தம் செய்வதாக மத்திய அரசு அறிவித்ததே தவிர, அவசர சட்டத்தை வாபஸ் பெறவில்லை. மத்திய, மாநில அரசுகள் போதிய விலை நிர்ணயம் செய் யாததால், விவசாயிகள், சர்க் கரை ஆலைகளுக்கு கரும்பை வெட்டுவதில்லை என முடிவெடுத்துள்ளனர். சர்க்கரை ஆலைகளைவிட, தனியார் நாட்டு

சர்க்கரை ஆலைகள், வெட்டு கூலி, லாரி வாடகையை ஏற்று, ஒரு டன் கரும்புக்கு வயல்வெளி விலையாக 2,300 ரூபாய் வழங்குகின்றன. இதனால், பெரும்பாலான விவசாயிகள் நாட்டு சர்க் கரை ஆலைகளுக்கு கரும்பை வெட்டுகின்றனர்.

ஏற்கனவே சர்க்கரை ஆலைகளுக்கு பதிவு செய்த விவசாயிகள் கூட, நாட்டு சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பை வெட்டி வருகின்றனர். நடப்பாண்டில் தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள் அரவைக்கு கரும்பு இல்லாமல் திண்டாடும் நிலை இப் போதே துவங்கிவிட்டது. சர்க்கரை உற்பத்தி வெகுவாக குறைய வாய்ப்புள்ளது. இப்போதே பெரும்பாலான கடைகளில் சர்க்கரை ஒரு கிலோ 45 ரூபாய் வரை விற்பனை செய்வதால், இன்னும் சில நாட்களிலேயே ஒரு கிலோ சர்க்கரை 50 ரூபாயை தாண்டும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.தமிழக விவசாயிகள் சங்க ஈரோடு மாவட்ட செயலர் சுப்பு கூறியதாவது:தற்போது உரம், பூச்சி மருந்து உட்பட அனைத்து பொருட்களும் விலை உயர்ந்து விட்டது. இருப்பினும், அரசு கரும்புக்கு நியாயமான விலையை நிர்ணியிக்க மறுத்து வருகிறது.ஒரு டன் கரும்புக்கு லாரி வாடகை, வெட்டுக்கூலி ஆகியவற்றை சர்க்கரை ஆலை நிர்வாகமே ஏற்று, டன்னுக்கு 2,000 ரூபாய் வழங்க வலியுறுத்தி வருகிறோம். ஆனால், 9 சதவீத சர்க்கரை சத்துள்ள கரும்புக்கு 1,435 ரூபாய் என, மத்திய அரசு விலை நிர்ணயம் செய்துள்ளது.தனியார் நாட்டு சர்க்கரை ஆலைகள் வெட்டுக் கூலி, லாரி வாடகையை ஏற்று, 2,300 ரூபாய் வரை தருகின்றன. அரசு, கரும்புக்கு போதிய விலை நிர்ணயம் செய்யும் வரை, விவசாயிகள் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வெட்டுவதில்லை என முடிவு செய்துள்ளோம்.இவ்வாறு சுப்பு கூறியுள்ளார்.

**தேங்காய் விலை உயருகிறது**

ஜனவரி 18,2010,01:41



பொள்ளாச்சி: தேங்காய் உற்பத்தி குறைந்துள்ளதால், வெளிமார்க்கெட்டில் தேங்காய் விலை ஜிவ்வென்று உயர்ந்து வருகிறது. மேலும், சமையல் தேவைக்கு தேங்காய் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், கொப்பரை உற்பத்திக்கு கிடைப்பதில்லை. கோவை மாவட்டத்தில் ஏப்ரல் மாதத்தில் தேங்காய் சீசன் துவங்கும். அதனால், இன்னும் மூன்று மாதத்திற்கு தேங்காய்க்கு தட்டுப்பாடு நிலவும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. மொத்த தேங்காய் உற்பத்தியில், தற்போது 20 சதவீதம் மட்டுமே மகசூலாக கிடைப்பதால், அன்றாட உணவு தேவைக்கு தேங்காய் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், கடந்த வார மார்க்கெட் நிலவரப்படி தேங்காய் விலை உயர்ந்துள்ளது.

காங்கேயம் வெளிமார்க்கெட்டில் கடந்த 9ம் தேதி நிலவரப்படி, தேங்காய் எண்ணெய் டின்னுக்கு 750 ரூபாய் விலை கிடைத்தது. தேங்காய் பவுடர் ஒரு கிலோவுக்கு 50 ரூபாய் விலை கிடைத்தது. இதனால், கொப்பரை விலையும்

கணிசமாக உயர்ந்து, கிலோவுக்கு 35 ரூபாய் விலை கிடைத்தது. தென்னந்தோப்புகளில் பறித்து வைத்துள்ள காய்ந்த தேங்காய் டன்னுக்கு 11 ஆயிரத்து 300 ரூபாய்க்கும், பச்சை தேங்காய் பத்தாயிரத்து 300 முதல் பத்தாயிரத்து 600 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. தோப்புகளில் ஒரு தேங்காய் 4.70 ரூபாய் முதல் 5.30 ரூபாய் வரையிலும் கொள்முதல் செய்யப் பட்டது. மொத்த மார்க்கெட்டில் ஒரு தேங்காய் 6.50க்கு விற்பனை செய்யப்பட்டது. நேற்றைக்கு முன்தின நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு அதிகபட்சமாக 35 ரூபாயும், தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 750 ரூபாயும், தேங்காய் பவுடர் ஒரு கிலோவுக்கு 50 ரூபாயும் விலை கிடைத்தது. ஆனால், தேங்காய் விலை மட்டும் உயர்ந்திருந்தது. தென்னந்தோப்புகளில் ஒரு தேங்காய் 6.25 முதல் 6.50 வரையிலும் கொள்முதல் செய்யப்பட்டது. கேரளாவில் கோட்டையம் பகுதிக்கும், டில்லி உள்ளிட்ட வட மாநிலங்களுக்கும் கோவையில் இருந்து தேங்காய் அனுப்பப்படுகிறது. இதனால், தேங்காய் விலை உயர்ந்து வருகிறது.

## காபி விவசாயத்துக்கு மானியம் : வாரிய விரிவாக்க பிரிவு தகவல்

கோவை : காபி விவசாயிகளுக்கு, 11வது ஐந்தாண்டு திட்டத்தில், மத்திய அரசு பல்வேறு மானிய திட்டங்களை அறிவித்துள்ளது.

காபி வாரியத்தின் கோவை விரிவாக்க பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கை: காபி விவசாயிகளுக்காக மத்திய அரசு 11வது ஐந்தாண்டு திட்டத்தில் பல்வேறு மானிய திட்டங்களை அறிவித்துள்ளது. வயது முதிர்ந்த காபி செடிகளை தோட்டங்களில் இருந்து அகற்றி விட்டு மறு நடவு மேற்கொள்ள மானிய திட்டம் உதவுகிறது. நீர் ஆதாரங்களை பெருக்கி, நீர்ப்பாசன திட்டங்களை மேம்படுத்த அரசு மானியம் அளிக்க உள்ளது.
காபி தரத்தை மேம்படுத்தவும், அரைக்கும்போது ஏற்படும் மாசுவை கட்டுப்படுத்தவும் மானியம் அளிக்க உள்ளது. இந்த திட்டங்களுக்கான மானியத்தை பெற, காபி வாரிய விரிவாக்க பிரிவு கள அலுவலகங்களை விவசாயிகள் அணுகலாம். வங்கி கடன் அல்லது சொந்த நிதியை பயன்படுத்தி வளர்ச்சி திட்டங்களை காபி தோட்டங்களில் மேற்கொள்ளும் விவசாயிகள், மானியம் பெற தகுதியுள்ளவர்கள். கம்பெனிகள், கழகங்கள், கூட்டுறவு சங்கங்களால் நிர்வகிக்கப்படும் காபி தோட்டங்கள் இத்திட்டத்தின் கீழ் மானியம்பெற தகுதியில்லை. மறு நடவு தவிர்த்த மற்ற திட்டங்களுக்கு, 20 ஹெக்டேர் வரை காபி தோட்டம் உடையவர்கள் மட்டுமே மானியம் பெற தகுதியுடைவர்கள். விண்ணப்பத்துடன், திட்டம் மேற்கொள்ளும் தோட்ட விண்ணப்பதாரரின் உரிமச் சான்று, நிரூபிக்கும் காபி பதிவுச் சான்று, பட்டா, சிட்டா அடங்கல் நகல் இணைக்க வேண்டும்.

விண்ணப்பதாரரின் அடையாளத்தை நிரூபிக்க வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஓட்டுனர் உரிமம் போன்றவற்றின் நகல் அவசியம். வளர்ச்சி திட்டம் மேற்கொள்ள உள்ள நிலத்தின் நான்கு எல்லை குறிக்கப்பட்ட வரைபடம், விண்ணப்பதாரர் கையெழுத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

கட்டட பணிகளுக்கான திட்டங்களுக்கு, வரைபடம் மற்றும் திட்ட மதிப்பீடும், உபகரணங்கள் தேவைப்படும் திட்டங்களுக்கு பதிவு பெற்ற இன்வாய்ஸ் இணைக்க வேண்டும். விண்ணப்பதாரர் உறுதிமொழியும் இடம் பெற வேண்டும். மானிய திட்டங்கள் மதிப்பீடு நிர்ணயம் செய்யப்பட்ட தொகையில், 20 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை மேற்கொள்ளவிருக்கும் பணியின் தன்மையை பொறுத்து அரசு வழங்கும். மேலும், விபரம் அறிய கோவையில் உள்ள காபி வாரிய துணை இயக்குனர் (விரிவாக்கம்) அலுவலகத்தை நேரில் அணுகலாம். இவ்வாறு, காபி வாரியத்தின் கோவை விரிவாக்க பிரிவு தெரிவித்துள்ளது.

## இயற்கை சீற்றத்தால் ஏற்படும் மகசூல் இழப்பை தவிர்க்க தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம்

கோவை : இயற்கை சீற்றங்களால் ஏற்படும் மகசூல் இழப்புகளுக்கு தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில், விவசாயிகளுக்கு காப்பீடு வழங்கப்படுகிறது.

"அக்ரிக்கல்சர் இன்சுரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா' நிறுவன மேலாளர் அன்பரசு வெளியிட்டுள்ள அறிக்கை: தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் அனைத்து விதமான உணவு பயிர்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் காப்பீடு செய்யப்படுகின்றன. நெல், கேழ்வரகு, சோளம், கம்பு, நிலக்கடலை, எள், உளுந்து, கொள்ளு, பருத்தி, கரும்பு, உருளைக் கிழங்கு, வாழை, மிளகாய், மரவள்ளி, மஞ்சள் மற்றும் வெங்காயம் ஆகிய பயிர்களுக்கு காப்பீடு செய்யப்படுகிறது.

அனைத்து விதமான இயற்கை சீற்றங்களால் ஏற்படும் மகசூல் இழப்புகளுக்கு இத்திட்டத்தில் காப்பீடு வழங்கப்படுகிறது. குத்தகைதாரர்கள், வங்கி கடன் பெறுவோர் மற்றும் கடன் பெறாதோர் உட்பட அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் சேரலாம். சராசரி மகசூலின் 150 சதவீதம் மதிப்பு வரை காப்பீடு செய்யலாம். மத்திய, மாநில அரசின் பரிந்துரையுடன் இத்திட்டம், "அக்ரிக்கல்சர் இன்சுரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா' நிறுவனம் மூலம் தமிழகத்தில் அமல்படுத்தப்படுகிறது. இதுவரை, இத்திட்டம் மூலம் ரூ.116 கோடி பிரிமியம் தமிழக விவசாயிகளிடம் பெறப்பட்டு ரூ.1171 கோடி நஷ்ட ஈடாக, 2008ம் ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் எட்டு லட்சம் விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

பயிர் கடன் பெற, விவசாயிகள் முன்மொழிவு படிவத்துடன் கணினி சிட்டா அல்லது அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து சான்றிதழ் பெற்று, தங்கள் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் வங்கியில் பிரீமியத்தை செலுத்த வேண்டும். முன்மொழிவு படிவங்கள் விவசாயத்துறையிடமும், கூட்டுறவு வர்த்தக வங்கியிலும் பெறலாம். இது குறித்த விவரங்களை மண்டல மேலாளர், அக்ரிகல்ச்சர் இன்சுரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிட், எண் 323, முதல் தளம், ஆந்திரா இன்சுரன்ஸ் பில்டிங், தம்புசெட்டி தெரு, பாரிமுனை, சென்னை-01 என்ற முகவரியில் அறியலாம். இவ்வாறு, அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### விவசாயிகளுக்கு பயிற்சி

கடலூர் : நல்லூர் வட்டம் நரசிங்கமங்கலம் கிராமத்தில் பருத்தி விவசாயிகளுக்கு வேளாண்மை துறை சார்பில் பயிற்சி அளிக்கப்பட்டது. நல்லூர் வேளாண்மை உதவி இயக்குனர் அப் பன்ராஜ் தலைமை தாங்கினார். வேளாண்மை பயிற்சி அலுவலர்கள் பரசிவம், வெங்கடேசன் ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

### சிறு, குறு விவசாயிகளுக்கு மானிய கடன் திட்டம் வங்கிகளின் விதிமுறையால் 'கானல் நீராக' உள்ளது

பண்ருட்டி : சிறு,குறு விவசாயிகள் ஆழ்துளை கிணறு அமைக்க அரசு அறிவித்த மானிய கடன் திட்டம் இரண்டாண்டுகளாக பயன்பாட்டிற்கு வராமல் "கானல் நீராக உள்ளது.

பெரிய விவசாயிகளுக்கு இணையாக சிறு, குறுவிவசாயிகள் பயிர் செய்து வளர்ச்சி பெற தமிழக அரசு பிற்படுத்தப்பட் டோர் நலத்துறை சார்பில் 50 ஆயிரம் மானியத்துடன் ஆழ்துளை கிணறு அமைக்க கடன் வழங்கும் திட்டம் கடந்த 2007-08ம் ஆண்டு கடலூர் மாவட் டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தில் பயன்பெற இரண்டரை ஏக்கர் நஞ்சை நிலம் அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலம் இருக்க வேண்டும். ஆழ்துளை அமைக்கும் செலவினை வங்கிகள் கடனாகவும், அரசு சார்பில் 50 ஆயிரம் மான்யம் வழங்கப் படுகிறது. இதற்காக வங்கி அதிகாரிகள் கூட்டம் நடத்தி வங்கிகள் கடன் வழங்க துறை அதிகாரிகள் அறிவுரை வழங்கினர்.
அதன்படி குறு விவசாயிகள் 148 பேர் கடன் பெற கடந்த ஒன்னரை ஆண்டிற்கு முன் உரிய ஆவணங்களுடன் அந்தந்த பகுதி கூட்டுறவு மற்றும் தேசிய வங்கிகளில் விண்ணப்பித்தனர். ஆனால் கூட்டுறவு வங்கிகளில் 5 ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு மட்டுமே இத்திட்டத்தில் ஆழ்துளை கிணறு அமைக்க கடன் வழங்க முடியும் என கூறிவிட்டனர். நிலவங்கி நிதி ஆதாரம் இல்லை என கூறிவிட்டது. தேசிய வங்கிகள் விதிமுறைப்படி " 3 ஏக்கர் நஞ்சை நிலம் உள்ளவர்களுக்கு மேல் உள்ளவர்களுக்கு மட்டுமே கடன் வழங்க முடியும்' என வங்கி அதிகாரிகள்

கூறிவிட்டனர்.

இதனால் கடந்த ஆண்டு 2007ல் தேர்வு செய்த 148 விவசாயிகளும், கடந் தாண்டு தேர்வு செய்யப் பட்ட ஆயிரம் விவசாயிகளும் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர். அரசு சிறு,குறு விவசாயிகள் வளர்ச்சி காண திட்டம் போட்டு செயல்படுத்தினாலும் வங்கிகளில் உள்ள விதிமுறைப்படி சிறுவிவசாயிகளுக்கு பயனின்றி "கானல் நீராகவே' உள்ளது. இதற்கு தமிழக அரசு கூட்டுறவு மற்றும் தேசிய வங்கிகளின் விதிமுறைகள் களைய தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

---

### கால்நடை சிகிச்சை முகாம்

தோகைமலை" கொசூர் அருகே குப் பாண்டியூரில் சிறப்பு கால் நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடந்தது. பஞ்., தலைவர் ஐயர் தலைமை வகித்தார். துணைத் தலைவர் முரு கேசன், ஒன்றிய கவுன்சிலர் கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.முகாமில் கால்நடை உதவி மருத்துவர்கள் கவுத மன், தட்சிணாமூர்த்தி, ஆய்வாளர்கள் எபனேசர், சுப்பிரமணி, பராமரிப்பு உதவியாளர் சாந்தி ஆகியோர் கொண்ட குழுவினர் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர்.கால்நடைகளுக்கு சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை, சினை பரி சோதனை, கன்றுகள், ஆடுகளுக்கு குடற்புழு நீக்கல், கோழிக்கழிச்சல் தடுப்பூசி, சுண்டுவாத அறுவை சிகிச்சை, செயற்கை முறை கருவூட்டல் உட்பட பல்வேறு இலவச சிகிச்சை அளித்தனர்.ஏற்பாடுகளை மாவட்ட கால்நடை பராமரிப்பு துறையினர் செய்திருந்தனர்.

### குறைந்துபோன மல்லிகை பூ சாகுபடி: வாசமில்லா மலருக்கு கிராக்கி அதிகரிப்பு

லாலாப்பேட்டை: பொங்கல் பண்டிகை காலத்தில் லாலாப்பேட்டைக்கு புகழ் அளிக்கும் மல்லிகை பூ, தற்போது சீசன் துவங்காததால் பெங்களூர் பகுதியில் விளையும் மல்லிகை விற்பனைக்கு வந்துள்ளது.லாலாப்பேட்டை பகுதியில் மல்லிகை செடி மாசி முதல் ஐப்பசி மாதம் வரை வளர்க்கப்படுகிறது. கடவூர், கிருஷ்ணராயபுரம், லாலாப்பேட்டை, தானியம்பட்டி, குளித்தலை பகுதியான நங்கவரம், வளையப்பட்டி, சூரியனூர் உள்ளிட்ட இடங்களில் தோட்டங்களில் பயிரிடப்படுகிறது.

நாட்டு மல்லிகை ரகமாக குண்டு மல்லிகை இப்பகுதியில் பெரும்பாலும் வளர்க்கப்பட்டு, அவை திருச்சி, மணப்பாறை, திண்டுக்கல், சேலம், மதுரை பூ மார்க்கெட்டுக்கு அனுப்பப்படுகிறது.சிறு மற்றும் குறு விவசாயிகள், மல்லிகை சாகுபடி மூலம் கணிசமான லாபம் பார்த்தனர். தற்போது சீசன் மாறிவிட்டதால், பூ விளைச்சலும் குறைந்துவிட்டது. மார்கழியில் இருந்து மூன்று மாதத்துக்கு முற்றிலும் இவை பூக்காத காரணத்தினால், வெளி மாநில பூ இப்பகுதிக்கு வரவழைக்கப்படுகிறது.கிலோ 600 ரூபாய் வரை மொத்தமாக மார்க்கெட்டில் விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்யப்படுவதால், பூ வியாபாரிகள் மல்லிகையை வாங்கி சில்லரை விற்பனைக்கு விற்க முடியாது என்பதால் புறக்கணிக்கின்றனர்.பெங்களூர் பகுதியில் விளையும் "காக்ட்ரா' என்னும் பெங்களூர் மல்லிகை தற்போது ஓசூர், கிருஷ்ணகிரி பகுதிகளிலும் விளைச்சல் உள்ளதால், இவையே வரவழைக்கப்படுகிறது. இவை கிலோவுக்கு 100 ரூபாய் மட்டுமே விலையுள்ளதால், பூ வியாபாரிகளுடைய ஆதரவும் கிடைத்துள்ளது. தற்போது மல்லிகை பூ வரவே இல்லாத காரணத்தினால், வாசனை இல்லாத பேப்பர் பூ போன்ற பெங்களூர் மல்லிகைக்கும் தற்போது 250 முதல் 300 ரூபாய் வரை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.பொங்கல் பண்டிகை காலத்தில் வாசனை பூ இல்லாமல், பெங்களூர் மல்லிகையை கொண்டே விழா கொண்டாடப்பட்டது.

### கரும்பில் நுண்ணூட்டச்சத்து குறைபாடு

மதுரை : கள்ளிக்குடி வட்டாரத்தில் பீளமேடு மண்வகை, சித்தூர், கொக்கலாஞ்சேரி, குராயூர், கூடக்கோவில், மையிட்டான் பட்டி, நேசநேரி, நல்லம நாயக்கன்பட்டி, செங்கப்படை, சிவரக்கோட்டை, வலையங்குளம்,

தென்னமநல்லூர், வில்லூர் கிராமங்களில் காணப்படுகிறது.

வேளாண் உதவி இயக்குனர் சாரநாத்பாபு கூறியதாவது: இம்மண்ணில் மிதமான நீர்ப்பிடிப்பு தன்மை, களர்த்தன்மை அதிகம் உள்ளது. தழை, மணிச் சத்துக்கள் குறைவாகவும், சாம்பல் சத்து அதிகமாகவும் உள்ளது. இம்மண் அமைந்துள்ள நிலங்களில் சுண்ணாம்பு சத்து அதிகம்இருப்பதால், மணிச் சத்து, நுண்ணூட்டச் சத்துக்கள் கிட்டாத நிலை ஏற்படுகிறது.

கள்ளிக்குடி வட்டாரத்தில் கள்ளிக்குடி, திருமால், தி.கொக்குளம், தென்னமநல்லூர் பகுதிகளில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது.  இரும்பு சத்து பற்றாக்குறை அறிகுறி தென்படும்போது, எக்டேருக்கு ஐந்து கிலோ இரும்பு சல்பேட் மற்றும் ஐந்து கிலோ யூரியாவை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து கரும்பு பயிர் முழுதும் நனையும்படி தெளிக்கலாம்.

தேவைப்பட்டால், மீண்டும் 15 நாள் இடைவெளியில் ஒரு முறை தெளிக்கலாம். எக்டேருக்கு நூறு கிலோ இரும்பு சல்பேட் உரத்தை அடியுரமாகவும் இடலாம். துத்தநாக சத்து குறைபாட்டை பொறுத்தவரை, இலையின் நரம்புகள் வெளிர் மஞ்சள் நிறக்கோடாக தோன்றும். நாளடைவில் இலைப்பரப்பு முழுதும் மஞ்சள் நிறமாக மாறி, பயிர் வளர்ச்சி குறைந்து மகசூல் பாதிக்கிறது.

இத்துத்தநாக சத்து குறைபாடு அறிகுறிகள் தோன்றும்போது, எக்டேருக்கு 25 கிலோ துத்தநாக சல்பேட்டை ஐந்து கிலோ யூரியாவுடன், 500 லிட்டர் நீரில் கரைத்து 18 நாள் இடைவெளியில் 2 அல்லது 3 முறை கைத்தெளிப்பான் மூலம் கரும்பு பயிர் நனையும்படி தெளிக்க வேண்டும்.
இச்சத்து குறைபாடுள்ள நிலங்களில் அடியுரமாக எக்டேருக்கு முப்பத்தேழரை கிலோ துத்தநாக சல்பேட், நுண்ணூட்ட உரத்தை, மண்ணின் கார, அமில நிலை அதிகம் உள்ள நிலங்களில் ஜிப்சம் இட்டு சீர்செய்த பின்பே, துத்தநாக சல்பேட்டை அடியுரமாக இட வேண்டும் என்றார்.

### விவசாய கல்லூரியில் கலை விழா

மேலூர் :  தமிழகம் முழுவதிலும் இருந்து 25க்கும் மேற்பட்ட கல்லூரிகள் கலந்து கொண்ட 'டேலன்சியா 2010' கலை விழா மதுரை விவசாய கல்லூரியில் நடந்தது.

சென்னை வருமான வரித் துறை இணை இயக்குநர் திவாகர் தலைமை வகித்தார். விவசாய கல்லூரி டீன் வைரவன், மனையியல் கல்லூரி பானுமதி முன்னிலை வகித்தனர். தமிழகம் முழுதிலும் இருந்து மருத்துவ கல்லூரி, இன்ஜினியரிங், விவசாயம், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் இதில் கலந்து கொண்டனர். இளைஞர்களின் கலைத் திறனை வெளி கொண்டு வரும் வகையில், கிளாசிக்கல் நடனம், நாட்டுப்புற நடனம், குழு நடனம், பாட்டுப் போட்டி, கார்ட்டூன், வினாடி வினா, ரங்கோலி உட்பட பல போட்டிகள் நடத்தப்பட்டன. நிகழ்ச்சியை கல்லூரி பேராசிரியர்கள் அனந்தகுமார், சிவசுப்பிரமணியன் மற்றும் மாணவர் மன்ற தலைவர் அனீஸ் ஏற்பாடு செய்திருந்தனர்.

### ஆடு வளர்க்க இலவச பயிற்சி

மதுரை : திருப்பரங்குன்றம் கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத் தலைவர் முருகானந்தம் அறிக்கை :
நவீன முறையில் ஆடு வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி ஜன.,20,21ல் இம்மையத்தில் நடக்கிறது. காலை 10 முதல் மாலை 5 மணி வரை நடக்கும் பயிற்சியில், ஆடு இனங்கள், ஆடுகளை தாக்கும் நோய்கள், கொட்டகை அமைப்பு,

தீவன பராமரிப்பு, இனப்பெருக்க பராமரிப்பு மற்றும் நோய்த் தடுப்பு முறைகள் குறித்து ஒலி,ஒளிக்காட்சியுடன் விளக்கப்படும். விருப்பமுள்ளவர்கள் நேரில் அல்லது 0452 - 248 3903ல் பதிவு செய்யலாம், என தெரிவித்துள்ளார்.

### விவசாயிகளுக்கு சில்வர் ஓக் மரங்கள் இலவசமாக வழங்க கோரிக்கை

கோத்தகிரி : கோத்தகிரி பொரங்காடு சீமைக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக சில்வர் ஓக் மரங்கள் வழங்கவேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இது குறித்து பொரங்காடு சீமை நலச்சங்க தலைவர் ராமகிருஷ்ணன் மாவட்ட கலெக்டருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியுள்ளாதாவது: தேயிலை தோட்டங்களில் சில்வர் ஓக் மரங்கள் வெட்டப்பட்ட தேயிலை தோட்டங்களில் மேற்கொண்டு மரங்கள் நடவு செய்தால் மட்டுமே, தேயிலை பராமரிக்கப்படுவதுடன், விவசாயிகளுக்கு கணிசமான லாபம் கிடைக்கும். இதனால், விவசாயிகள் சில்வர் மரம் நடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அதே நேரத்தில், புதிதாக மரம் நடவு செய்ய நிதிப்பற்றாக்குறை விவசாயிகளுக்கு பெரும் குறையாக உள்ளது. மாவட்ட முழுவதும் 4 லட்சம் சில்வர் ஓக் மரங்களை வனத்துறை சார்பில், காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு ராமகிருஷ்ணன் கூறியுள்ளார்.

### நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெற ஆலோசனை

சிவகங்கை : நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெற ஜிப்சம் உரமிடுமாறு உழவர் பயிற்சி நிலைய உதவி இயக்குனர் லயோலா அன்புக்கரசி தெரிவித்தார்.அவர் கூறியதாவது: எண்ணெய்வித்து பயிர் உற்பத்தியில் நிலக்கடலை முன்னிலையில் உள்ளது. கடலை பயிரிட்ட பின் சரியான நேரத்தில் தேவையான உரத்துடன் ஜிப்சம் இட்டால் மகசூல் அதிகரிக்கும். எண்ணெய் சத்துடன் பொக்கு இல்லாத கடலை விளையும். விதைத்த 45 முதல் 70 வது நாள் பயிரில் விழுது இறங்கும். இந்நாட்களில் தான்  கடலை பூத்து அதன் விழுதுகள் மண்ணில் இறங்கி காய்கள் உருவாகும். விழுதுகள் மண்ணில் இறங்கும் போது மண் இருக்கமின்றி பொள பொளவென இருத்தல் அவசியம். ஜிப்சம் உரமிடுவதால் மண் பக்குவத்திற்கு வரும். விதைத்த 45 வது நாள் களைவெட்டி, மண் அணைக்கும் போது, ஏக்கருக்கு 80 கிலோ வீதம் ஜிப்சம் உரம் இடவேண்டும். உரத்தை கோணி பையில் கொட்டி, ஒவ்வொரு செடியில் விழுமாறு தெளிக்கவும்.

### பருத்தி செடிகளில் வேர்புழுக்கள் தாக்குதல்: விவசாயிகள் பாதிப்பு

தேவதானப்பட்டி:எருமலைநாயக்கன்பட்டியில் பருத்தி செடிகளில் வேர்புழுக்கள் தாக்கி செடிகள் காய்ந்து வருவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். தரமற்ற விதை, நோய்தாக்குதல், கூலித் தொழிலாளர்கள் பற்றாக் குறை என பல்வேறு காரணங்களால் தேனி மாவட்டத்தில் பருத்தி சாகுபடியின் பரப்பளவு குறைந்துள்ளது. பெரியகுளம் ஒன்றியம், எருமலைநாயக்கன்பட்டியில் 200 ஏக்கர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப் பட்டுள்ளது. தேவையான விதை அருகில் உள்ள தேவதானப்பட்டி, வாடிப்பட்டி, தேனி போன்ற இடங்களில் உரக்கடைகளிலும், வியாபாரிகளிடமும் வாங்கியுள்ளனர். தற்போது காய்கள் காய்த்துள்ளது. இன்னும் சில நாட்களில் பருத்தி விளைச்சலுக்கு வந்துவிடும்.

ஆனால் கடந்த சில நாட்களாக பருத்தி செடியின் வேர்பகுதியில் புழுத் தாக்குதல் அதிகமாக காணப்படுகிறது.புழுத்தாக்கிய செடிகள் பட்டுப்போய்விடுகின்றன. நடவு செய்து பராமரிப்பு செய்து பலன் கிடைக்கும் வரை ஒரு ஏக்கருக்கு 12 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. தற்போது 50 ஏக்கருக்கு மேல் வேர்புழுத்தாக்கி பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் கூறுகையில், "தரமற்ற பருத்தி விதைகளால் பலன் தரும் நிலையில் வேர்புழுத்தாக்குதல் ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் தருவதற்கு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

### மீன்கள் அதிகம் கிடைக்க வாய்ப்புள்ள பகுதிகள்

தூத்துக்குடி: தூத்துக்குடி மாவட்ட கடலோர பகுதிகளில் அதிகமாக மீன் கிடைக்க வாய்ப்புள்ள பகுதிகளை ஹைதராபாத்தில் உள்ள இந்திய தேசிய கடல் தகவல் சேவை மையம் செயற்கைக்கோள் மூலம் ஆராய்ந்து வெளியிட்டுள்ளது. பாண்டியன் தீவிற்கு வடகிழக்கு திசையில் 42 டிகிரியில் 8-12 கி.மீ. தூரத்தில் 10-15 மீ. ஆழத்தில், தூத்துக்குடி வடகிழக்கு திசையில் 58 டிகிரியில் 11-16 கி.மீ.தூரத்தில் 10-15மீ. ஆழத்தில், பட்டணமருதூர்க்கு தென்கிழக்கு திசையில் 109 டிகிரியில் 7-12 கி.மீ. தூரத்தில் 10-15மீ. ஆழத்தில், வேம்பாருக்கு தென்மேற்கு திசையில் 199 டிகிரியில் 13-18 கி.மீ. தூரத்தில் 10-15மீ. ஆழத்தில் அதிக மீன்கள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. இத்தகவலை தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் (பொறுப்பு) டேனியல் ஜேம்சன் தெரிவித்துள்ளார்.

### ஆத்மா திட்டத்தின்கீழ்விவசாயிகள் கல்வி சுற்றுலா

தூத்துக்குடி:கயத்தாறு வட்டார ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாயிகள் கல்விச் சுற்றுலா நடந்தது.கயத்தாறு துணை வேளாண்மை அலுவலர் தவமணி பொறுப்பில் சுற்றுலா சென்று வரப்பட்டது. கயத்தாறு வட்டாரத்தின் 5000 ஹெக்டேருக்கு மேல் சாகுபடி செய்யப்படும் மக்காச்சோளம் தொழில்நுட்பம் பற்றி அறிய திண்டுக்கல் மாவட்டம் வாகரை மக்காச்சோளம் ஆராய்ச்சி நிலையத்தில் பல்வேறு தொழில் நுட்பங்கள் செயல்படுத்தியுள்ள திடல்கள் பார்வையிடப்பட்டது. உற்பத்தி உயர்த்திட தேவையான தொழில்நுட்பம் பற்றி மக்காச்சோளம் ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சியாளர் ஆறுமுகச்சாமி தொழில்நுட்பம் பற்றி விவசாயிகளுக்கு விளக்கிக் கூறினார்.

திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையில் உள்ள இயற்கை வேளாண்மை பண்ணையம் மண்புழு உரத்தின் பயன் மற்றும் தென்னை நார்கழிவு, தாவர கழிவு ஆகியவற்றில் இருந்து புளுரோட்டஸ் மூலம் கம்போஸ்ட் தயாரிக்கும் ஆத்மா திட்டம் பற்றி வந்த விவசாயிகளுக்கு விளக்கிக் கூறப்பட்டது. பயணம் சென்ற வழியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மலர்பயிர்கள், காய்கறி பயிர்கள், பயறுவகை பயிர்கள், நெற்பயிர்கள் ஆகிய வயல்கள் பார்வையிடப்பட்டு அவற்றில் காணப்படும் பயிரைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நன்மை தரும் பூச்சிகள் ஆகியவை வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் மூலம் விளக்கிக் கூறப்பட்டது.மதுரை வேளாண்மைக் கல்லூரியில் செயல்படுத்தப்படும் பல்வேறு பரிசோதனை திடல்கள், செம்மைநெல் சாகுபடி நுட்பங்கள் பற்றி பேராசிரியர் வெங்கட்ராமன் விளக்கிக் கூறினார். ஆத்மா விவசாய ஆலோசனைக்குழுத் தலைவர் முத்துப்பாண்டி உட்பட பலர் கலந்து கொண்டனர். சுற்றுலாவில் பங்குபெற்ற விவசாயிகள் பல்வேறு மாவட்டங்களில் நடக்கும் நவீன விஞ்ஞான வேளாண்மை உற்பத்தி தொழில்நுட்பங்களை தெரிந்து கொண்டு நமது கயத்தாறு வட்டாரத்தில் செயல்படுத்தி உலகோர்க்கு உணவளிக்கும் வேளாண்மை சிறப்பு பெற இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. கயத்தாறு வேளாண்மை உதவி அலுவலர் கபில்ராஜ் விவசாயிகளுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தினார். இத்தகவலை வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

### உளுந்து பயிரில் அதிக மகசூல் பெற வேளாண் உதவி இயக்குனர் யோசனை

திருச்சி: உளுந்து பயிரில் அதிக மகசூல் பெறுவது குறித்து கறம்பக்குடி வேளாண்துறை உதவி இயக்குனர் உதயகுமார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:உளுந்து பயிரில் பல்வேறு காரணங்களினால் பூக்கள் உதிர்ந்து மகசூல் பெருமளவில் குறைகிறது. பூக்கின்ற 25 சதவீத பூக்களே காய்கின்றன. பூச்சி தாக்குதல், சத்து பற்றாக்குறை, கடுமையான வெள்ளம் மற்றும் வறட்சி, வடிகால் வசதியின்மை, அதிகமான மேக மூட்டம், காற்றில் அதிக ஈரப்பதம்

போன்ற காரணங்களால் பூக்கள் உதிர்கின்றன. பூக்கள் உதிர்வதை கட்டுப்படுத்த 2 சதவீத டிஏபி கரைசலை உளுந்து பயிருக்கு தெளிக்க வேண்டும். ஏக்கருக்கு 4 கிலோ டிஏபி உரத்தை 10 லிட்டர் நீரில் முதல் நாள் இரவே ஊற வைக்க வேண்டும். அடுத்த நாள் கரைசலை துணியால் நன்கு வடிகட்டி தெளிந்த கரைசலுடன் 190 லிடடர் நீர் விட்டு கலந்து தெளிக்க வேண்டும். மேற்கண்டவாறு தயாரித்த 2 சதவீத டிஏபி கரைசலை உளுந்து விதைத்து 25வது மற்றும் 40வது நாளிலும் என இருமுறை கைத்தெளிப்பான் மூலம் மாலை வேளையில் இலைகள் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். டிஏபி கரைசலை தெளிக்கும் போது நிலத்தில் அவசியம் ஈரம் இருக்க வேண்டும். இதன் மூலம் பூ உதிர்வது தடுக்கப்படுகிறது, அதிக காய்கள், திரட்சியான மணிகள் கிடைக்கிறது. ஒரே நேரத்தில் அறுவடை செய்ய முடிகிறது.

### இறவை நிலக்கடலையில் மகசூலை அதிகரிக்க வேளாண் அதிகாரி 'அட்வைஸ்'

திருச்சி : இறவை நிலக்கடலையில் மகசூலை அதிகரிக்க என்ன வழி என்பது குறித்து கறம்பக்குடி வேளாண்மை உதவி இயக்குனர் உதயகுமார் ஆலோசனை தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: கறம்பக்குடி வட்டாரத்தில் 1230 எக்டேரில் இறவை பயிராக நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டு தற்போது 20 நாட்கள் வயதுள்ள பயிராக உள்ளது. நிலக்கடலை பயிரில் சத்து பற்றாக்குறையால் பூக்கள் குறைந்து மகசூல் பெருமளவில் குறைய வாய்ப்புள்ளது. சத்துப் பற்றாக்குறையை கட்டுப்படுத்தி மகசூல் அதிகரிக்க நுண்ணூட்ட கரைசலை நிலக்கடலை பயிருக்கு தெளிக்க வேண்டும். ஏக்கருக்கு ஒரு கிலோ டிஏபி 400 கிராம் அம்மோனியம் சல்பேட், 200 கிராம் போராக்ஸ் உரத்தை 15 லிட்டர் நீரில் முதல் நாள் இரவே ஊற வைக்க வேண்டும். அடுத்த நாள் கரைசலை துணியால் நன்கு வடிகட்டி தெளிந்த கரைசலுடன் 185 லிட்டர் நீர் விட்டு கலந்து தெளிக்க வேண்டும்.

இவ்வாறு தயாரித்த நூண்ணூட்ட கரைசலை நிலக்கடலை விதைத்து 25வது நாளிலும் 35 வது நாளிலும் என இருமுறை கைத்தெளிப்பான் மூலம் மாலை வேளையில் இலைகளில் நன்கு படும்படி தெளிக்க வேண்டும்.இதன் மூலம் அதிக பூக்கள், காய்கள், திரட்சியான மணிகள், பொக்கு காய்கள் இல்லாத நிலை ஆகிய நன்மைகள் கிடைக்கும்.ஜிப்சம் இட உகந்த நேரம்கறம்பக்குடி வட்டாரத்தில் இறவை நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டு தற்போது 20 முதல் 30 நாட்கள் வயதுள்ள பயிராக உள்ளது. இறவை நிலக்கடலைக்கு இந்த நேரத்தில் ஜிப்சம் இடுவது அவசியம். நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெற ஜிப்சம் இட்டு மண் அணைப்பது என்ற தொழில்நுட்பம் மிகவும் முக்கியமானது. நிலக்கடலையில் விழுதுகள் மண்ணில் எளிதாக இறங்க செடிகளை சுற்றி மண் அணைப்பது அவசியம். இல்லையேல் விழுதுகள் நிலத்தின் மேல் பரவி காய்கள் சரியாக பிடிக்காது.நிலக்கடலையில் திரட்சியான அதிக காய்கள் பெற ஜிப்சம் இடுவது அவசியம். ஜிப்சத்தில் சுண்ணாம்பு சத்தும், கந்தக சத்தும் உள்ளது. நிலக்கடலை திரட்சியாக இருக்க சுண்ணாம்பு சத்து தேவைப்படுகிறது. காய்களில் எண்ணை சத்து அதிகரிக்க கந்தக சத்து தேவைப்படுகிறது. இந்த இரண்டு சத்துக்களும் ஜிப்சத்தில் உள்ளது. இறவை நிலக்கடலையில் அடியுரமாக ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சமும், இரண்டாவது களையெடுக்கும் சமயத்தில் அதாவது விதைத்து 40 முதல் 45 நாட்களில் களை எடுக்கும் சமயத்தில் ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சமும் இட்டு செடிகளை சுற்றி நன்கு மண் அணைத்து விட வேண்டும். இதனால் நிலக்கடலையில் நன்கு விழுதுகள் இறங்கி காய்கள் திரட்சியாகவும் எண்ணை சத்து மிகுந்ததாகவும் கிடைக்கும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### மணப்பாறையில் வேளாண்மை வளர்ச்சி திட்டப்பணி ஆய்வு

மணப்பாறை: திருச்சி மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் மணப்பாறை வட்டார பகுதியில் வேளாண்மை வளர்ச்சி திட்ட பணிகளை ஆய்வு மேற்கொண்டார். மணப்பாறை வட்டத்தில் வேளாண்மைத்துறையின் மூலம் விவசாயிகளின் முன்னேற்றத்துக்காகவும், வேளான் உற்பத்தியை பெருக்குவதற்காகவும் பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்பட் டு வருகின்றது. இப்பணிகளை திருச்சி மாவட்ட வேளாண் துறை துணை இயக்குனர் (மாநில திட்டங்கள்) ராம்குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தேசிய வேளா ண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் துல்லியப்பண்ணையம், தரிசி நில மேம்பாடு செம்மை நெல்

சாகுபடி மற்றும் மண்புழு உர உற்பத்தி ஆகிய திட்டப்பணிகளை பார்வையிட்டார். இதில் கொட்டப்பட்டி புதூர், பொய்கைப்பட்டி பகுதிகளில் செயல்படுத்தப்பட் டு வரும் துல்லியய பண்ணையம், எப்.சீழையூர் மற்றும் வே ங்கைகுறிச்சி கிராமங்களில் தரிசு நில மேம்பாட்டு திட்டப்பணிகளையும், பல்வேறு கிராமங்களில் செயல்படுத்தப்பட்டுள்ள செம்மை நெல் சாகுபடி வயல்களையும், எப்.கீழையூர் கிராமத்தில் என்.ஏ.டி.பி., திட்டம் மூலம் 50 சதவீதம் மானியத்தில் அமைக்கப்பட்டுள்ள மண்புழு உர உற்பத்தி கூடாரங்களையும் பார்வையிட்டார். ஆய்வின் போது வேளாண் மைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்க ளை பயன்படுத்தி உற்பத்தியை பெருக்க வேண்டும் என விவசாயிகளுக்கு வேளாண்மை துணை இயக்குனர் அறிவுரை வழங்கினார்.

### விவசாயிகளுக்கு விதை கிராம திட்டப்பயிற்சி

மன்னார்குடி: மன்னார்குடி மற்றும் கோட்டூர் யூனியனைச் சேர்ந்த விவசாயிகளுக்கு விதை கிராம பயிற்சி என்ற முகாம் காஞ்சிக்குடிக்காடு அரசு விதைப்பண்ணையில் நடந்தது.திருவாரூர் மாவட்ட வேளாண் துணை இயக்குனர் கபிலன் பயிற்சி முகாமில் பங்கேற்ற பயிற்சியாளர்கள், விவசாயிகளுக்கு தொழில் நுட்ப ஆலோசனை வழங்கினார். மன்னார்குடி மற்றும் கோட்டூர் யூனியனைச் சேர்ந்த விவசாயிகள் 300 பேர் பங்கேற்றனர். மன்னார்குடி வேளாண் உதவி இயக்குனர் மயில்வாகணன், விதைச்சான்று அலுவலர் தெய்வேந்திரன், பண்ணை மேலாளர் ராஜேந்திரன் ஆகியோர் பயிற்சியளித்தனர்.விவசாயிகள் விதை நெல் உற்பத்தி செய்யும் முறைகள் குறித்தும், விதை சுத்திகரிப்பு செய்யும் முறை, நெல் பயிர் சாகுபடியில் உள்ள உயர் தொழில் நுட்பங்களான செம்மை நெல் சாகுபடி, இயந்திர நடவு முறை, இயற்கை வேளாண்மை போன்ற பயிற்சிகள் மற்றும் செயல் விளக்கங்கள் வழங்கப்பட்டன. ஏற்பாடுகளை மன்னார்குடி வேளாண் அலுவலர்கள் காமராஜ், மீனா, விதை உதவி அலுவலர்கள் தர்மராஜ், சூரியநாராயணன் ஆகியோர் செய்தனர்.

### விவசாயிகளுக்கு மணிலா உற்பத்தி பயிற்சி

வாலாஜாபேட்டை:காவேரிப்பாக்கம் வட்டார வேளாண்மை துறையின் மூலம் அத்திப்பட்டு கிராமத்தில் மணிலா விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு, மணிலா விதை உற்பத்தி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.நிகழ்ச்சிக்கு உதவி அலுவலர் ராஜேந்திரன் தலைமை வகித்து வரவேற்றார். வேளாண்மை அலுவலர் பாபு, மணிலா சாகுபடி பற்றிய தொழில் நுட்பங்கள் மற்றும் தரமான மணிலா விதை உற்பத்தி குறித்து விளக்கினார்.உதவி இயக்குனர் ஜெயச்சந்திரன், மணிலா சாகுபடியில் விதை நேர்த்தி செய்தல், ஜிப்சம் இடுதல், நுண்நுட்ட கரைசல் தெளித்தல் மற்றும் உரங்கள் இடுதல் குறித்தும், வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் குறித்தும் விளக்கினார். பயிற்சியில் 50க்கும் அதிகமான விவசாயிகள் பங்கேற்றனர்.

### எண்ணெய் வித்து உற்பத்தி விவசாயிகளுக்கான பயிற்சி

அவலூர்பேட்டை : மேல்மலையனூரில் எண்ணெய் வித்து உற்பத் தியை அதிகரிக்க விவ சாயிகளுக்கான பயிற்சி நடந்தது.

ஐசோபாம் எண்ணெய் வித்துக்கள் திட்டத்தின் படி நடந்த பயிற்சி முகா மிற்கு வேளாண்மை உதவி இயக்குனர் சரவணன் தலைமை தாங்கினார். வேளாண் அலுவலர் ஷோபனா மணிலா, சூரிய காந்தி, ஆமணக்கு ஆகிய பயிர்களின் உற் பத்தி திறன் அதிகரிக்கும் புதிய தொழில் நுட்பங் களை குறித்து விளக் கினார். விதை நேர்த்தி முறை, நுண்ணூட்ட கலவை தெளித்தல், உரமிடும் கருவியின் செயல் பாடு, செம்மை நெல் சாகுபடி , ஜிப்சம், பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்தும் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. உதவி வேளாண் அலு வலர்கள் கிருஷ்ணன், ரங் கநாதன், தமிழ்மணி, கிருஷ்ணமூர்த்தி, ரகுபதி, வெங்கடேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### கால் நடைகளுக்கு சிகிச்சை முகாம்

அவலூர்பேட்டை : மேல்மலையனூர் ஒன்றியம் சிறுதலைப் பூண்டி கிராமத்தில் நீர்வள, நிலவள திட்டத்தில் சிறப்பு கால்நடை முகாம் நடந்தது.
ஊராட்சி தலைவர் கலைவாணி தலைமை தாங்கினார். கால்நடை மருத்துவமனை டாக்டர் மணிமாறன், உதவியாளர்கள் செல்லமுத்து, ராமகிருஷ்ணன் உள்ளிட்ட குழுவினர் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். இதில் 240 மாடுகளுக்கு தடுப்பூசியும், 320 ஆடு மற்றும் கன்றுகளுக்கு குடற்புழு நீக்கமும், சினைக்கு வராத கிடேரி மற்றும் பசுக்களுக்கு மலடு நீக்க சிகிச்சையும், தாது உப்பு கலவையும் அளிக்கப்பட்டது. அண்ணாதுரை நன்றி கூறினார்.

### பயிர் பாதுகாப்பு பயிற்சி முகாம்

விக்கிரவாண்டி : முண்டியம்பாக்கத்தில் வேளாண்மைத் துறை சார்பில் விதை உற்பத்தி, பயிர் பாதுகாப்பு குறித்த பயிற்சிமுகாம் நடந்தது.

ஊராட்சி தலைவர் சாந்தி தலைமை தாங்கி பயிற்சியை துவக்கி வைத்தார். திண்டிவனம் எண்ணெய்வித்து ஆராய்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் ராமமூர்த்தி கலந்து கொண்டு உளுந்து, பச்சை பயறு மற்றும் துவரை சாகுபடி ,தொழில் நுட்பங்கள்,புதிய ரகங்களின் மகசூல் குறித்து பேசினார்.
விதைச்சான்று அலுவலர் சந்துரு, விதை ஆய்வாளர் சுகுமார் விதைப் பண்ணை அமைக் கும்முறை குறித்து பேசினர். விக்கிரவாண்டி வட்டார வேளாண்மை இயக்குனர் ராஜசேகர் விதை உற்பத்தி மற்றும் விவசாயம் குறித்த கேள்விகளுக்கு விளக்கமளித்தார். வேளாண்மை அலுவலர் தமிழ் வேல், உதவி வேளாண்மை அலுவலர்கள் ரவிச்சந்திரன்,முருகேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### நீர்வள நிலவள திட்டம் ராஜபாளையத்திற்கு நிதி கிடைக்குமா

ராஜபாளையம்:நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் விவசாய வணிகத்துறை மூலம் ராஜபாளையத்திற்கு வரும் நிதியாண்டிலாவது போதிய நிதி ஒதுக்கீடுகளை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.விவசாயிகளுக்கு நன்மையளிக்கும் வகையில் விவசாயத்துறையின் கீழ் வரும் பல்வேறு துணைத் துறைகளின் மூலம் நீர் வள நில வளத் திட்டம் அமல்படுத்தப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் பகுதிகளில் விதை மானியம், சொட்டுநீர்பாசனம், செம்மை நெல் சாகுபடி, துல்லிய பண்ணைத் திட் டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மும்முரமாக செயல்படுத்தப்படும்.இதில் விவசாய வணிகத் துறையின் கீழ் கடந்த ஆண்டு ராஜபாளையத்தில் புதுக்குளம், எக்கனாக்குளம், குரவன்குளம், சேந்தனேரி, சோலைசேரி உள்ளிட்ட பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

ஆனால் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.இதனால், விவசாய வணிகத்துறை சார்பில் இப் பகுதிகளில் செயல்படுத்த வேண்டிய உலர் களம் அமைத்தல், நவீன தொ ழில் நுட்பங்கள் குறித்தபயிற்சி முகாம் நடத்துதல், விளைபொருட் களை பாதுகாப்பாக சேமித்து வைத் தல், தரம் பிரித்தல், விற் பனை மேலாண்மை தொடர்பான பயிற்சிகளை அளிக்க முடியாத நிலை உள்ளது.

அத்துறை சார்பில் பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்பட்டு பல மாதங்களாகியும் நிதி ஒதுக்காததால் திட்டம் முடங்கிப்போயுள்ளது.இது குறித்து விவசாயத்துறை வட்டாரத்தில் விசாரித்த போது, "ஆண்டுதோறும் குறிப்பிட்ட பகுதிகளை தேர்ந்தெடுத்து, இத்திட்டத்தை செயல்படுத்த உள்ளோம். முதல் ஆண்டில் நிதி ஒதுக்கீடு கிடைக்காததால் செயல்படுத்த முடியவில்லை. வரும் நிதியாண்டிலிருந்து தொடர்ந்து நிதி உதவி கிடைக்க வாய்ப்புள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டது.

விவசாயிகளின் நலன் சார்ந்த இத்திட்டத்தை தீவிரமாக செயல்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு வசதியாக 2010-2011 நிதியாண்டிலாவது போதிய நிதி ஒதுக்கீடுகளை செய்ய வேண்டும்.

## வெங்காயம் விலை வீழ்ச்சி கண்ணீரில் விவசாயிகள்

ஸ்ரீவில்லிபுத்தூர்:வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் விவசாயிகள் நஷ்டத்தால் கண்ணீர் வடித்து வருகின்றனர்.ஸ்ரீவில்லிபுத்தூரில் பூவாணி, பிள்ளையார் நத்தம், மல்லி, உட்பட பகுதிகளில் 500 ஏக்கருக்கும் அதிகமான நிலங்களில் விவசாயிகள் கடந்த ஐப்பசி மாதம் பெய்த மழையை நம்பி வெங்காயத்தை நடவு செய்தனர். ஆனால் மழை தொடர்ந்து பெய்யாததால் கண்மாய், கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் போனது. இதனால் பாதிக்கும் மேற்பட்ட நிலங்களில் வெங்காய செடிகள் காய்ந்து போயின. மீதமிருந்த செடிகளுக்கு டேங்கருக்கு 300 ரூபாய் முதல் 400 ரூபாய் வரை தண்ணீர் வாங்கி பாய்ச்சி வெங்காயத்தை விளைவித்தனர். ஆனால் ஒரே நேரத்தில் வெங்காய அறுவடை துவங்கியதால் அதன் விலையும் கடுமையாக வீழ்ந்தது. இதனால் விவசாயிகள் நஷ்டத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து விவசாயிமுருகன் கூறியதாவது: கடந்த புரட்டாசி மாதத்தில் வெங்காயத்தின் விலை அதிகம் இருந்தது. இதை நம்பி 2 ஏக்கரில் வெங்காயம் நடவு செய்தேன். ஆனால் மழை பொய்த்ததால் பாதிக்கும் மேற்பட்ட இடங்களில் செடிகள் கருகின. எஞ்சிய செடிகளுக்கு டேங்கர் தண்ணீரை விலைக்கு வாங்கி பாய்ச்சி விளைய வைத்தேன். இதன் மூலம் ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை செலவானது.

கடந்த மாதம் வரை 60 கிலோ கொண்ட மூடைக்கு 1000 ரூபாய் வரை விற்கப்பட்டு வந்தது. ஆனால் கடந்த சில நாட்களாக வெங்காயத்தின் விலை வெகுவாக குறைந்து ஒரு மூடைக்கு 700 ரூபாய் வரை வியாபாரிகள் விலைக்கு வாங்குகின்றனர். இதனால் ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. என அவர் தெரிவித்தார்.

## நெல் சாகுபடியை காப்பாற்றுவதற்கு தொழில் நுட்ப வசதிமேம்படுத்தணும்: உடுமலை விவசாயிகள் கோரிக்கை

உடுமலை : "நெல் சாகுபடியில் தொடர் நஷ்டங்களை தவிர்க்க , தொழில் நுட்பங்கள் செயலாக்கம் மற்றும் தேவையான வசதிகளை மேம்படுத்த வேண்டும்', என நெல் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். உடுமலை அருகேயுள்ள அமராவதி அணை பாசனத்தில் பல ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்படுகிறது. குறுவை, சம்பா, தாளடி என மூன்று பருவங்களில் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. சில ஆண்டுகளாக ஒவ்வொரு சீசனிலும் நெல் விளைச்சல் குறைந்தபடி உள்ளது. ஏக்கருக்கு 30 மூட்டை விளைச்சல் கிடைக்கும் போகத்தில் 15 மூட்டையாக விளைச்சல் குறைந்துள்ளது. ஆற்றுப்படுகையை ஒட்டிய பகுதிகளில் நெல்லை தவிர மாற்றுப்பயிர் பயிரிட முடியாது.

இதனால், ஒவ்வொரு சீசனிலும் நஷ்டத்தை ஏற்றபடி விவசாயிகள் நெல் சாகுபடியை தொடர்ந்து வருகின்றனர். பல விவசாயிகள் ஒத்து போகாத மண் தன்மை இருந்தாலும் மக்காச்சோளம், தென்னை போன்ற பயிர்களை பயிரிட துவங்கியுள்ளனர். பாரம்பரியமாக நெல் பயிரிட்டு வரும் நிலையில் அரசு நெல் சாகுபடிக்கான சில விஷயங்களில் உதவ வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

தரமான விதை வினியோகம்: வேளாண்துறை சார்பில் பல்வேறு புதிய ரக நெல் விதைகள் உருவாக்கப்பட்டாலும், அவை விவசாயிகளுக்கு முறையாக சென்று சேர்வதில்லை. தற்போது, விவசாயிகள் தனியாரிடமும், சுழற்சி முறையிலும் விதைகளை பயன்படுத்தி வருகின்றனர். விளைச்சல் குறைவிற்கு தரமான விதை கிடைக்காததும் ஒரு காரணமாகும். வேளாண் விரிவாக்க மையங்களின் மூலம் ஒவ்வொரு சீசனிலும் தேவையான விதைகளை இருப்பு வைத்து மானியத்தில் வினியோகிக்க வேண்டும்.

தொழில்நுட்பங்கள்: விளைச்சலை அதிகரிக்க செம்மை நெல் சாகுபடியை வேளாண்துறை செயல்படுத்தி வருகிறது. இந்த தொழில்நுட்பத்திற்காக குறைந்த பரப்பில் மட்டும் செயல்விளக்க பண்ணைகள் அமைக்கப்படுகிறது.

இதனால், பெரும்பாலான விவசாயிகளுக்கு இந்த தொழில்நுட்பம் சென்று சேரவில்லை. செம்மை நெல் சாகுபடி திட்டத்தை முழுமையாக செயல்படுத்த சிறப்பு திட்டத்தை உருவாக்கி விவசாயிகளுக்கு சென்று சேரும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இயந்திரங்கள்: நெல் சாகுபடியில் தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக களை எடுத்தல், அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டு செலவு பல மடங்கு அதிகரிக்கிறது. செலவு அதிகரித்து குறைந்த விலை கிடைப்பதால் நஷ்டம் ஏற்படுகிறது. களை எடுத்தல் மற்றும் அறுவடை பணிகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வீடர் மற்றும் அறுவடை இயந்திரங்களை வேளாண் பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும். பாசன சங்க கட்டுப்பாட்டில் இயந்திரங்களை ஒப்படைத்தால் விவசாயிகள் எளிதில் பயன்பெற முடியும்.

கிடங்கு வசதி: அறுவடை செய்த நெல் மணிகளை காய வைக்க போதிய வசதி இப்பகுதிகளில் இல்லை. ரோடுகளிலும், தனியார் இடங்களிலும் நெல் மணிகளை விவசாயிகள் காய வைக்கின்றனர். ஒவ்வொரு கிராமத்திலும் சாகுபடி பரப்பிற்கு தகுந்தளவு களங்களை ஏற்படுத்த வேண்டும். அறுவடை சமயங்களில் விலை வீழ்ச்சி ஏற்படும் போது நெல்லை இருப்பு வைக்க போதிய கிடங்கு வசதி இல்லை. இதனால், விவசாயிகள் இடைதரகர்களிடம் குறைந்த விலைக்கு விற்று வருகின்றனர்.

கொள்முதல் மையம்: அமராவதி பாசன பகுதியில் நெல் பயிரிடும் விவசாயிகள் பல ஆண்டுகளாக அரசு கொள்முதல் மையம் அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால், அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. விவசாயிகளின் கோரிக்கை குறித்து அரசு நடவடிக்கை எடுத்தால் நெல் சாகுபடி பரப்பு குறையாமல் அரிசிக்காக பிற மாநிலங்களை எதிர்பார்க்கும் நிலை மாறும்.

தினகரன்

**உடுமலையில் பிப்.6ம் தேதி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் 1/18/2010 12:24:54 AM



உடுமலை : திருப்பூர் மாவட்டம் உடுமலையில் உழவர் உழைப்பாளர் கட்சி தலைவர் செல்லமுத்து நிருபர்களிடம் கூறியதாவது:

கேரள மாநிலம் ஆனைமுடி ஓடையில் உற்பத்தியாகும் நீர் பாம்பாறு, தேனாறு, சின்னாறு மூலம் அமராவதி அணைக்கு வருகிறது. பாம்பாறு மூலம் 80 சதவீதம் நீர்வரத்து உள்ளது. இதை தடுத்து நிறுத்த கேரள அரசு மறையூர் கோழிக்கடவு அருகே அணை கட்ட திட்டமிட்டுள்ளது. இதற்காக ரூ.230 கோடி நிதி ஒதுக்கி உள்ளது. அதோடு நாள் ஒன்றுக்கு 40 மெகாவாட் வீதம் ஆண்டுக்கு 8.5 கோடி மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் வகையில் நீர்மின்நிலையமும் அமைக்க திட்டமிட்டுள்ளது.

கேரள அரசு அணை கட்ட இருப்பதால் அமராவதி அணைக்கு வரவேண்டிய 80 சதவீத தண்ணீர் பாதிக்கப்படும். தற்போது வரும் முழு அளவு தண்ணீர் திருப்பூர், கரூர் மாவட்ட விவசாயத்துக்கும், குடிநீருக்கும் போதுமானதாக இல்லை. இந்நிலையில் கேரள அரசு புதிய அணை கட்டினால் இந்த 2 மாவட்டங்களும் பெரிதும் பாதிக்கப்படும். தமிழக விவசாயிகள் நலன் கருதி பாம்பாற்றில் அணை கட்டும் கேரள அரசின் முயற்சியை மத்திய அரசு தடை செய்ய வேண்டும், அணை கட்டும் நடவடிக்கையை கேரள அரசு நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி உடுமலையில் வரும் பிப்ரவரி 6ம் தேதி விவசாயிகளைத் திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்றார்.

**வானிலை பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர இன்று கடைசி நாள்**

பதிவு செய்த நாள் 1/18/2010 12:44:43 AM

விருதுநகர் : வானிலை பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர இன்று (ஜன.18) கடைசி நாள் அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து விருதுநகர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் பாண்டியராசு கூறியதாவது:
விருதுநகர் மாவட்டத்தில் வானிலை பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர உள்ள கடன் பெறா விவசாயிகள் மக்காச்சோளம், எள், நிலக்கடலை, சூரியகாந்தி, தக்காளி, வெங்காயம், மா போன்ற பயிர்களுக்கு காப்பீடு செய்ய இன்று கடைசி நாளாகும். அனைத்து விவசாயிகளும் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளலாம்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் பொங்கல் விழா

*கோவை, ஜன.18–*

*கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உள்ள பயிர் இனப்பெருக்கம், தோட்டக்கலை, மண் மற்றும் பயிர் மேலாண்மை ஆகிய துறைகள் சார்பில் பொங்கல் விழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் மண் மற்றும் பயிர் மேலாண்மை மைய இயக்குனர் ஜெயராமன் வரவேற்றார். பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை தாங்கினார். பொங்கல் விழா நிகழ்ச்சியாக முதலில் வேளாண்மை பல்கலைக்கழக பண்ணையில் உள்ள கால்நடைகளுக்கு பொங்கல் விழா வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்காக கால்நடைகள் அனைத்தும் மலர் மற்றும் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. அலங்கரிக்கப்பட்ட கால்நடைகள் அனைத்தும் தெப்பம் முன்பாக அணிவகுத்து நின்றன. அணிவகுத்து நின்ற அனைத்து கால்நடைகளுக்கும் வழிபாடு செய்யப்பட்டு சர்க்கரை பொங்கல் மற்றும் பழங்கள் ஊட்டப்பட்டன. அதன் பின்னர் கால்நடைகளின் அணிவகுப்பு நடந்தது. அணிவகுப்பு ஊர்வலத்தை பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி தொடங்கி வைத்தார். இதை தொடர்ந்து பண்ணை தொழிலாளர்களுக்கு ஓட்டப்பந்தயம், மெதுவாக சைக்கிள் ஓட்டும் போட்டி, உரி அடிக்கும் போட்டி,*

*கயிறு இழுக்கும் போட்டி உள்பட பல்வேறு போட்டிகள் நடந்தன. போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்.பொங்கல் விழாவில் மேலாண்மை குழு உறுப்பினர் அன்பு, பதிவாளர் சுப்பையன், மத்திய பண்ணை பேராசிரியர் மற்றும் தலைவர் வேலாயுதம், பல்வேறு துறைகளை சேர்ந்த பேராசிரியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.*

## நடப்பு நிதி ஆண்டின் முதல் 9 மாதங்களில்

## வேளாண் விளைபொருள்கள் மீதான முன்பேர வர்த்தகம் ரூ.9 லட்சம் கோடி

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*மும்பை*
*நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், வேளாண் விளைபொருள்கள் மீது நடைபெற்ற முன்பேர வர்த்தகம், சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 104.45 சதவீதம் அதிகரித்து ரூ.9.02 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இதே காலத்தில், அனைத்து பொருள்கள் மீது நடைபெற்ற முன்பேர வர்த்தகம் 50 சதவீதம் அதிகரித்து ரூ.55.26 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.*
*அரிசி – கோதுமை*
*கடந்த 2006–07–ஆம் நிதி ஆண்டில் ரூ.13 லட்சம் கோடி மதிப்பிற்கு வேளாண் விளைபொருள்கள் மீது முன்பேர வர்த்தகம் நடைபெற்று இருந்தது. உணவு பொருள்களின் விலை உயர்வை கட்டுப்படுத்தும் வகையில், அரிசி, கோதுமை, துவரம் பருப்பு, உளுந்து, உருளைக்கிழங்கு, சோயா எண்ணெய், கொண்டை கடலை, ரப்பர் ஆகியவற்றின் மீது முன்பேர வர்த்தகம் மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டது. இதனையடுத்து, சென்ற 2008–09–ஆம் நிதி ஆண்டில், வேளாண் விளைபொருள்கள் மீது நடைபெற்ற முன்பேர வர்த்தகம் 54 சதவீதம் சரிவடைந்து ரூ.6 லட்சம் கோடியாக குறைந்தது.*
*இந்நிலையில், சென்ற 2009–ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், கொண்டை கடலை, சோயா எண்ணெய், உருளைக்கிழங்கு, ரப்பர் ஆகியவற்றின் வர்த்தகம் மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டது. இதனால், வேளாண் விளைபொருள்கள் மீது நடைபெறும் முன்பேர வர்த்தகம் சிறப்பான அளவில் அதிகரித்து வருகிறது.*
*இது குறித்து முன்பேர வர்த்தக சந்தைகள் கட்டுப்பாட்டு அமைப்பான பார்வர்ட் மார்க்கெட்ஸ் கமிட்டியின் தலைவர் பீ.சி.கத்வா கூறும்போது, “நடப்பு நிதி ஆண்டில் வேளாண் விளைபொருள்கள் மீது ரூ.13 லட்சம் கோடி மதிப்பிற்கு வர்த்தகம் நடைபெறும்” என்று தெரிவித்தார்.*
*லாப நோக்கம்*
*நம் நாட்டில் தற்போது தேசிய அளவில் நான்கு முன்பேர வர்த்தகச் சந்தைகளும், மண்டல அளவில் 19 சந்தைகளும் செயல்பட்டு வருகின்றன. விலையில் ஏற்படும் திடீர் ஏற்ற, இறக்கத்தால், தயாரிப்பாளர்களுக்கும், நுகர்வோருக்கும் ஏற்படும் பாதிப்பை எதிர்கொள்ளும் நோக்கத்தில் முன்பேர வர்த்தகம் நடைபெறுகிறது. இதில், சிலர் லாப நோக்கம் கருதி ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பணவீக்கம் அதிகரிக்கும்போது அத்தியாவசிய உணவு பொருள்கள் மீது முன்பேர வர்த்தகம் மேற்கொள்ள தடை விதிக்கப்படுகிறது.*